**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

STC No. : 62/2024

Name : Siranjeevi

P.W. : 1

Father Name :

Village :

Taluk : Madathukulam

Occupation :

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **22.01.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேதி மாவட்டம் சின்னமனூர் வட்டார பகுதிகளில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.11.2020 ம் தேதி மடத்துக்குளம் வட்டார பகுதிகளில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியில் இருந்த போது அன்றைய தினம் பிற்பகல் 01.30 மணிக்கு இந்தியன் மினரல்ஸ் என்ற கம்பெனிக்கு ஆய்விற்காக சென்ற போது அங்கிருந்தவரிடம் என்னை அறிமுகம் செய்து கொண்டு மேற்கண்ட நிறுவனத்தில் ஆய்வு செய்த போது உரிமயாளர் பற்றிய விவரம் கேட்டதில் அங்கிருந்த அபு பக்கர் என்பவர் நான் தான் நிறுவனத்தின் உரிமையாளர் என்று அவரது அடையாள ஆவணத்தின் நகலை வழங்கினார். உணவு பாதுகாப்பு துறையின் நிறுவனத்திற்கான உரிமத்தின் நகலையும் என்னிடம் வழங்கினார். ஆய்வின் போது பொது மக்களின் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்து packaged drinking water நான்கு 1 லிட்டர் பாட்டில்களை அது இருந்த நிலையில் அப்படியே அதற்கான தொகை செலுத்தி வாங்கி

சட்ட முறைப்படி படிவம் 5A தயாரித்து 1ம் எதிரிக்கு சார்வு செய்யப்பட்டது. அங்கிருந்த விஷ்ணு குமார் என்பவர் சாட்சியாக இருக்க கேட்டு அவர் சம்மதித்து உணவு மாதிரி எடுக்கும் வரை அங்கிருந்தார். உணவு பாதுகாப்பு சட்ட விதிமுறைகளின் படி நான்கு உணவு மாதிரிகளை பேக் செய்தேன். உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையத்தில் அங்கீகரிக்கப்பட்ட NAPL ஆய்வகத்திற்கு நான்காவது பகுதி உணவு மாதிரியை அனுப்பப் கோரும் சட்ப்படியான உரிமை எதிரிக்கு உள்ளதை அவரிடம் கடிதம் மூலம் தெரிவித்தேன். அவர் தனக்கு விருப்பம் இல்லை என்று கூறினார். சட்ட விதிமுறைகளை பின்பற்றி படிவம் 6 மற்றும் அலுவலக முத்திரை உணவு மாதிரியுடன் இணைத்து 16.11.2022 ம் தேதி உணவு பகுப்பாய்வகம், மதுரைக்கு அனுப்பி வைத்தேன். உணவு மாதிரியை எடுத்தற்கான ஒப்புகை மற்றும் உணவு மாதிரி சமர்ப்பிக்கப்பட்டதற்கான கடிதத்தை நியமன அலுவலரிடம் தெரிவித்தேன். உணவு பகுப்பாய்வகம், மதுரைக்கு மேற்கண்ட உணவு மாதிரியை 18.11.2022 அன்று பெறப்பட்டு ஆய்வு செய்ததில் மேற்படி உணவு மாதிரியானது தப்பு குறியீடு மற்றும் பாதுகாப்பற்றது என 19.12.2022 அறிக்கை மூலமாக 22.12.2022 நியமன அலுவலகத்தால் மேற்படி அறிக்கை பெறப்பட்டது. மேற்படி அறிக்கை எதிரிக்கு கடிதம் தயார் செய்யப்பட்டு 26.12.2022 அன்று பதிவுத் தபால் மூலம் எதிரிக்கு அனுப்பப்பட்டது. எதிரி தப்பு குறியீடு மற்றும் பாதுகாப்பற்ற உணவை விற்பனை செய்த குற்றத்திற்காக அவர் மீது வழக்கு தொடர 02.01.2023 அன்று நியமன அலுவலர் அவர்களின் மூலம் குற்ற வழக்கு தொடர அனுமதி வேண்டி ஆணையாளர் சென்னை உணவு பாதுகாப்பு துறை அவர்களுக்கு கோப்பு அனுப்பி வைக்கப்பட்டது. அக்கோப்பின் மீது ஆணையாளர் அவர்கள் எதிரி மீது 29.04.2024 ம் தேதி நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கி கடிதம் பெறப்பட்டு புகார் தாக்கல் செய்யப்பட்டது.

அ.சா.ஆ.1– 20.04.2012 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழ் எண். 103 ஒளி நகல்

அ.சா.ஆ.2– எதிரியின் ஆதார் அட்டை ஒளி நகல்

அ.சா.ஆ.3– எதிரியின் உணவு பாதுகாப்பு உரிம சான்றிதழ் ஒளி நகல்

அ.சா.ஆ.4– 15.11.2022 தேதியிட்ட ரொக்க ரசீது அசல்

அ.சா.ஆ.5– 15.11.2022 தேதியிட்ட படிவம் 5(A) அசல்

அ.சா.ஆ.6– 15.11.2022 தேதியிட்ட NABL பகுப்பாய்விற்காக விற்பனையாளருக்கு

கொடுக்கப்பட்ட அறிவிப்பு அசல்

அ.சா.ஆ.7– 15.11.2022 தேதியிட்ட படிவம் 6

அ.சா.ஆ.8– 15.11.2022 தேதியிட்ட மாதிரி அரசு முத்திரையிட்ட தாள்

அ.சா.ஆ.9– 16.11.2022 தேதியிட்ட உணவு மாதிரி பகுப்பாய்விற்கு அனுப்பிய கூரியர் ரசீது (ரூ.180/–)

அ.சா.ஆ.10– 16.11.2022 தேதியிட்ட உணவு மாதிரி பகுப்பாய்விற்கு அனுப்பிய கூரியர் ரசீது (ரூ.30/–)

அ.சா.ஆ.11– 15.11.2022 தேதியிட்ட திருப்பூர் நியமன அலுவலருக்கு கொடுக்கப்பட்ட கடிதம்

அ.சா.ஆ.12– 15.11.2022 தேதியிட்ட திருப்பூர் நியமன அலுவலர் ஒப்புகை சீட்டு

அ.சா.ஆ.13– 25.11.2022 தேதியிட்ட உணவு பகுப்பாய்வாளரின் கடிதம்

அ.சா.ஆ.14– 19.12.2022 தேதியிட்ட உணவு பகுப்பாய்வாளரின் அறிக்கை

அ.சா.ஆ.15– 22.12.2022 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட கடிதம்

அ.சா.ஆ.16– 26.12.2022 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அஞ்சலக ரசீது

அ.சா.ஆ.17– 02.01.2023 தேதியிட்ட நியமன அலுவலரின் பரிந்துரை கடிதம்

அ.சா.ஆ.18– 29.04.2024 தேதியிட்ட உணவு பாதுகாப்பு ஆணையரின் அனுமதி கடிதம்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.22 17:10:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்